**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்.**

**முன்னிலை: சீ. ராஜ குமாரன் B.E. L.L.B.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.**

**2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**2057 வது திருவள்ளுவர் ஆண்டு,பராபவ ஆண்டு,ஆனி மாதம் 30ம் நாள்**

<u>ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 102/2026</u>

**(CNR.No. TNNM-14-000109-2026)**

அரசுக்காக

காவல் உதவி ஆய்வாளர்,

வாழவந்திநாடு காவல் நிலையம் – குற்ற முறையீட்டாளர்

(குற்ற எண்.50/2024)

எதிர்

சின்னசாமி, த/பெ. கொங்கன்,

பெரும்பரப்பு பட்டி, தேவனூர் நாடு,

கொல்லிமலை வட்டம்,

நாமக்கல். – எதிரி

**( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற R.O.C No. 814/2020/RG/F1. தேதி: 07.04.2021 உத்தரவு படி)**

| | | |
|---|---|---|
| 1. | சம்பவ நாள் | 27.04.2024 |
| 2. | புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்) | 02.02.2026 |
| 3. | எதிரி கைது செய்யப்பட்டு | கைது செய்யப்பட்ட \| பிணையில் சென்ற நாள் |

<table>
<tr><td></td><td>பிணையில் சென்ற நாள்</td><td><table><tr><td>நாள்</td><td></td></tr><tr><td>–</td><td>29.06.2026</td></tr></table></td></tr>
<tr><td>4.</td><td>குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டு</td><td>எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) of IPC –ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன.</td></tr>
<tr><td>5.</td><td>BNSS பிரிவு 263(2) ன் கீழான கேள்வி</td><td>29.06.2026</td></tr>
<tr><td>6.</td><td>எதிரியின் பதில்</td><td>பொய் வழக்கு</td></tr>
<tr><td>7.</td><td>வழக்கின் விசாரணை தொடங்கிய நாள்</td><td>30.06.2026</td></tr>
<tr><td>8.</td><td>சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td><table><tr><th>அரசு தரப்பு சாட்சி கள்</th><th>சாட்சிகளின் பெயர்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr><tr><td>அ.சா.1</td><td>பாப்பம்மாள்</td><td>30.06.2026</td><td>30.06.2026</td></tr><tr><td>அ.சா.2</td><td>கொங்கன்</td><td>30.06.2026</td><td>30.06.2026</td></tr><tr><td>அ.சா.3</td><td>ஸ்டீபன் லூர்துராஜ்</td><td>08.07.2026</td><td>08.07.2026</td></tr></table></td></tr>
<tr><td>9.</td><td>வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள்</td><td>08.07.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 10. | BNSS பிரிவு 351(1)(ஆ) ன் கீழான கேள்வி | 10.07.2026 |
| 11. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | 14.07.2026 |
| 12. | தீர்ப்பு | முடிவாக, எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) of IPC ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை BNSS பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 13. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தீர்ப்பின் நகல் வழங்கப்பட்ட நாள் | 14.07.2026 |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | இல்லை. |

******

இந்த வழக்கானது 10.04.2026–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் திருமதி. P. கவிதா., அரசு உதவி வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. R. ஆனந்த சித்தர் அவர்கள் முன்னிலையாகியும், 10.07.2026–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு

வந்த போது , இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கின் சாட்சி மற்றும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

அரசு தரப்பு வழக்கு யாதெனில், இவ்வழக்கின் வாதி கொங்கனும் எதிரி சின்னுசாமியும் அப்பா மகன் உறவு முறையாவர்கள் என்றும், வாதியின் தோட்டத்தில் எதிரியின் ஆடு மாடுகள் மேய்ந்து விட்டதால் எதிரியின் மனைவி சங்கீதாவை வாதி கொங்கன் கண்டித்துள்ளதாகவும், 27.04.2024ந் தேதி 14.20 மணிக்கு வாழவந்திநாடு காவல் நிலைய சரகம் தேவனூர் நாடு, பரியூர் பட்டி, சோளக்காடு பகுதியில் உள்ள வாதியின் தோட்டத்தில் உள்ள அட்டை கொட்டகைக்கு அருகில் வாதி கொங்கன் நின்று கொண்டிருந்த போது எதிரி வாதியை பார்த்து ஏண்டா தேவடியா கண்டார ஓலி பயலே உன்னுடைய நிலத்தில் அப்படிதாண்டா ஆடு மாடு மேயும் என்று தகாத வார்த்தையால் திட்டியதாகவும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி சின்னுசாமி கையில் வைத்திருக்கும் தென்னை மட்டையால் வாதியின் தலையிலும் உடலிலும் மாறி மாறி அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியதாகவும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக வாதி கொங்கனை பார்த்து எதிரி சின்னுசாமி கையில் வைத்திருந்த தென்னை மட்டையை காட்டி ஆடு மாடு அப்படிதாண்டா உன் நிலத்தில் மேயும் நீ ஒழுங்கா காட்டை காலி பண்ணிட்டு ஓடிடு இல்லைனா உன்ன கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டல் விடுத்ததாகவும், நிகழ் நிலை புகார் தாரரான பாப்பம்மாள் கொடுத்த புகாரின் பேரில் வாழவந்திநாடு காவல் நிலைய குற்ற எண் 50/2024 ல் எதிரி மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) of IPC –ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை முடிக்கப்பட்டு எதிரி மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) of IPC ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2) இவ்வழக்கின் இறுதி அறிக்கை மற்றும் பிற ஆவணங்களின் பரிசீலனை செய்ததில் எதிரி மீது முதல் நிலை வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இந்த வழக்கினை ஆண்டு பட்டிகை வழக்கு எண் 102/2026 ன் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் பேரில் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும், BNSS 230–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

3) வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரி படித்துப் பார்க்கப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், BNSS 193–ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து, எதிரி மீது சொல்லப் பட்டுள்ள குற்றம் குறித்து எடுத்துரைக்கப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) of IPC ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரியிடம் வினவிய போது, எதிரி குற்றச் சாட்டுகளை மறுத்து, குற்றவாளி இல்லை என்றார்.

4) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.11** வரையிலான சான்றாவணங்களும், **அ.சா.பொ.1** சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டன.

**<u>5). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>**

**5.1. அ.சா.1 பாப்பம்மாள் தனது சாட்சியத்தில்**, ஆஜர் எதிரியை தெரியும் என்றும், வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள முதல் கைரேகை தன்னுடையதுதான் என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் குறித்து தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் புகார் வாக்குமூலத்தில் உள்ள முதல் கைரேகை மட்டும் அ.சா.ஆ.1 ஆகவும், சமரச மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.2. அ.சா.2 கொங்கன் தனது சாட்சியத்தில்**, ஆஜர் எதிரியை தெரியும் என்றும், வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5.3. அ.சா.3 ஸ்டீபன் லூர்துராஜ் தனது சாட்சியத்தில்**, தான் வாழவந்திநாடு காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் திரு. முத்துசாமி, புலன் விசாரணை அதிகாரிகளான உதவி ஆய்வாளர் திரு. தியாகராஜு மற்றும் உதவி ஆய்வாளர் திரு. குமார் ஆகியோரின் கையொப்பம் எதனக்கு தெரியும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 28.04.2024ம் தேதி 12.00 மணிக்கு வாழவந்திநாடு காவல் நிலையத்தில் தலைமை காவலர் திரு. முத்துசாமி என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது முன்னதாக நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமைமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற கொங்கன் என்பவரின் அடிதடி வழக்கு தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கொங்கன் மயக்க நிலையில்

இருந்ததால் அவருடன் இருந்த அவரது மனைவி பாப்பாம்மாளை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து நிலைய கு.எ.50/2024, இதச 294(b), 324, 506(ii) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு. தியாகராஜு அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், வழக்கை புலன் விசாரணைக்கு எடுததுக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திரு. தியாகராஜு கடந்த 28.04.2024ம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கணேசன், ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் சம்பவயிடத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட சுமார் 90 செ.மீ. நீளமுள்ள தென்னை மட்டை ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் சாட்சிகள் பாப்பாம்மாள், கொங்கன், குப்புசாமி, சிவபிரகாசம், கணேசன், ராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கில் எதிரியை கைது செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாததால் எதிரிக்கு குவிமுச பிரிவு 41A ன் கீழ் அறிவிப்பு கொடுத்து அதன் பேரில் எதிரி புலன் விசாரணைக்கு முறையாக ஆஜரானதால் எதிரி இவ்வழக்கில் கைது செய்யப்படவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கின் மேல் விசாரணைக்காக வழக்கின் கோப்புகளை காவல் உதவி ஆய்வாளர் திரு. குமார் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், வழக்கை தனது விசாரணைக்கு

எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாள்ர் திரு. குமார் கடந்த 25.01.2025ம் தேதி சாட்சி கொங்கனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. கோபால் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றதாகவும், பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் திரு. முத்துசாமி என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச 294(b), 324, 506(ii) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 ன் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகவும், 90 செ.மீ நீளமுள்ள தென்னை மட்டை அ.சா.பொ.1 ஆகவும், விபத்து பதிவேடு அ.சா.ஆ.9 ஆகவும், காயச்சான்றிதழ் அ.சா.ஆ.10 ஆகவும், மருத்துவ கருத்துரை அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**6)** இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக தோன்றும் சாட்சிகளின் சாட்சியம் குறித்து, எதிரியிடம் BNSS 351(1)(ஆ)–ன் படி எடுத்துரைக்க, எதிரி பொய் சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதன்பேரில், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

**7)** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**8)** அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.**1** முதல் அ.சா.**3** வரையிலான சாட்சிகள்

விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

9) எதிரி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இவ்வழக்கில் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றும், வாதி தொடுத்த பொய்யான புகாரின் மீது சரியான புலன் விசாரணை செய்யாமல் போலீசார் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கு சந்தேகத்துடன் அமைந்துள்ளது என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

10.1. இந்த வழக்கின் நிகழ்நிலை புகார் தாரரான பாப்பம்மாள் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது முதல் விசாரணையில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள முதல் கைரேகை தன்னுடையதுதான் என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் குறித்து தனக்கு தெரியாது என்றும் கூறியதால் அ.சா.1 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது அ.சா.1 எதிரியும் தானும் சமாதானமாக சென்று விட்டோம் என்றும், சமரச மனுவில் உள்ள முதல் கைரேகை தன்னுடையது தான் என்றும், குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் மேற்படி சமரச மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது. அரசு தரப்பு குறுக்கு

விசாரணையில் அ.சா.1 எதிரியுடன் சமாதானமாக சென்று விட்டதாக கூறியுள்ள போதிலும், அ.சா.1 யிடமிருந்து எதிரி மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் எதையும் வெளிக்கொணரவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10.2. அரசு தரப்பில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள கொங்கன் தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியும் என்றும், வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறியதால் அ.சா.2 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது அ.சா.2 எதிரியும் தானும் சமாதானமாக சென்று விட்டோம் என்றும், சமரச மனுவில் உள்ள இரண்டாவது கைரேகை தன்னுடையது தான் என்றும், குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் மேற்படி சமரச மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது. அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.2 எதிரியுடன் சமாதானமாக சென்று விட்டதாக கூறியுள்ள போதிலும், அ.சா.2 யிடமிருந்து எதிரி மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் எதையும் வெளிக்கொணரவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10.3. அரசு தரப்பில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள ஸ்டீபன் லூர்துராஜ் தனது சாட்சியத்தில் தான் வாழவந்திநாடு காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் திரு. முத்துசாமி, புலன் விசாரணை அதிகாரிகளான உதவி ஆய்வாளர் திரு. தியாகராஜு மற்றும் உதவி ஆய்வாளர் திரு. குமார் ஆகியோரின் கையொப்பம் எதனக்கு தெரியும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 28.04.2024ம் தேதி 12.00 மணிக்கு வாழவந்திநாடு காவல் நிலையத்தில் தலைமை காவலர் திரு. முத்துசாமி

என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது முன்னதாக நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமைனையில் இருந்து கிடைக்கப்பெற்ற கொங்கன் என்பவரின் அடிதடி வழக்கு தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கொங்கன் மயக்க நிலையில் இருந்ததால் அவருடன் இருந்த அவரது மனைவி பாப்பாம்மாளை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து நிலைய கு.எ.50/2024, இதச 294(b), 324, 506(ii) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு. தியாகராஜு அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், வழக்கை புலன் விசாரணைக்கு எடுததுக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திரு. தியாகராஜு கடந்த 28.04.2024ம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கணேசன், ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் சம்பவயிடத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட சுமார் 90 செ.மீ. நீளமுள்ள தென்னை மட்டை ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் சாட்சிகள் பாப்பாம்மாள், கொங்கன், குப்புசாமி, சிவபிரகாசம், கணேசன், ராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கில் எதிரியை கைது செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாததால் எதிரிக்கு குவிமுச பிரிவு 41A ன் கீழ் அறிவிப்பு கொடுத்து அதன் பேரில் எதிரி

புலன் விசாரணைக்கு முறையாக ஆஜரானதால் எதிரி இவ்வழக்கில் கைது செய்யப்படவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கின் மேல் விசாரணைக்காக வழக்கின் கோப்புகளை காவல் உதவி ஆய்வாளர் திரு. குமார் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாள்ர் திரு. குமார் கடந்த 25.01.2025ம் தேதி சாட்சி கொங்கனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. கோபால் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றதாகவும், பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் திரு. முத்துசாமி என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச 294(b), 324, 506(ii) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 ன் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகவும், 90 செ.மீ நீளமுள்ள தென்னை மட்டை அ.சா.பொ.1 ஆகவும், விபத்து பதிவேடு அ.சா.ஆ.9 ஆகவும், காயச்சான்றிதழ் அ.சா.ஆ.10 ஆகவும், மருத்துவ கருத்துரை அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. மேற்படி அ.சா.3 சாட்சியத்தில் இருந்து புலன் விசாரணை முறையாக நடைபெற்றது என்பதை கூற முடியுமே தவிர எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் பட்டதாக அறுதியிட்டு கூற இயலாது.

**11)** அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை மிககவனத்துடன் பரிசீலிக்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12) முடிவாக,

எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) of IPC ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை BNSS பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான சி.பி எண் 47/2025 ஆக பெறப்பட்டுள்ள ஆ.சா.பொ.1 ஆன சுமார் 90 செ.மீ. நீளமுள்ள தென்னை மட்டை ஒன்றை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலம் முடிந்தவுடன் அழிக்க BNSS பிரிவு 498 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரி எழுதி கொடுத்த பிணைய பத்திரங்கள் இவ்வழக்கு மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு தானாக ரத்தாகி விடும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து –தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14–ஆம் நாள் செவ்வாய்கிழமை** ஆகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.14 17:00:58 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**அரசு தரப்பு சாட்சிகள்—**

| வரிசை எண் | சாட்சிகளின் வரிசை | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் பங்கு |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | பாப்பம்மாள் | புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | கொங்கன் | கண்ணுறு சாட்சி |
| 3. | அ.சா.3 | ஸ்டீபன் லூர்துராஜ் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்—**

| வரிசை எண் | ஆவணங்களின் வரிசை | ஆவணங்களின் பெயர் | ஆவணங்கள் யாரால் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள முதல் கைரேகை | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | சமரச மனு | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | புகார் வாக்குமூலம் | அ.சா.3 |
| 4. | அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| 5 | அ.சா.ஆ.5 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| 6 | அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |

| | | | |
|---|---|---|---|
| 7 | அ.சா.ஆ.7 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.3 |
| 8 | அ.சா.ஆ.8 | படிவம் 91 | அ.சா.3 |
| 9 | அ.சா.ஆ.9 | விபத்து பதிவேடு | அ.சா.3 |
| 10 | அ.சா.ஆ.10 | காயச்சான்றிதழ் | அ.சா.3 |
| 11 | அ.சா.ஆ.11 | மருத்துவ கருத்துரை | அ.சா.3 |

**அரசுத் தரப்பு சான்று பொருள்–**

| வரிசை எண் | ஆவணங்களின் வரிசை | சான்று பொருள் | ஆவணங்கள் யாரால் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|
| 1. | அ.சா.பொ.1 | 90 செ.மீ நீளமுள்ள தென்னை மட்டை | அ.சா.3 |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–** இல்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.14 17:01:06 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**குறிப்பு–**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்றக் காவலில் இல்லை.
2. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

3. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

RAJAKUMARAN S
Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.14 17:01:11 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

CASE SUMMARY

**CC-102/2026, Cr.No. 50/2024**

(CNR.No. TNNM-14-000109-2026)

VALAVANTHINADU POLICE STATION

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | - |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 02.02.2026 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 29.06.2026 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 355 of the BNSS | Petition / Crl.M.P.No / Result<br>U/s.359 of BNSS / M.P.No.2/2026 / Dismissed<br>U/s.437 of BNSS / C.M.P.No. 95/2026 / Allowed |
| vi | Date of Examination in-chief and cross-examination of a witness | Witness examined as / Date of Chief Examination / Date of Cross Examination<br>PW1- Pappammal / 30.06.2026 / 30.06.2026<br>PW2- Kongan / 30.06.2026 / 30.06.2026<br>PW3-SteebanLoorthuraj / 08.07.2026 / 08.07.2026 |
| vii | Date of examination of the accused under section 351(1)(b) of the BNSS | 10.07.2026 |
| viii | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; | NIL |
| ix | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

RAJAKUMARAN S
Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.14 17:01:17 +0530

Judicial Magistrate,
Sendamangalam.